# சுருக்கக் குறிப்பும் கருத்துரையும்

## கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவத்திற்கான ஜனாதிபதி செயலணி

2020 ஜுன் 02 ஆம் திகதிய 2178/17 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமைக்கான ஜனாதிபதி செயலணியினை ஜனாதிபதி நிறுவியுள்ளார்.

**‘ஜனாதிபதி செயலணியினை’ உருவாக்குவதற்கு எந்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?**

‘ஜனாதிபதி செயலணியினை’ உருவாக்குவதற்கு ஜனாதிபதியினை விசேடமாக இயலுமாக்கும் சட்டம் எதுவுமில்லை. அரசியலமைப்பின் உறுப்புரை 33 இன் கீழான அதிகாரங்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக வர்த்தமானி குறிப்பிடுகின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 33 ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறித்துரைக்கின்றது. ஜனாதிபதியினால் பின்வருவனவற்றினை நிறைவேற்ற முடியும் என இந்த உறுப்புரை தெளிவாகக் குறிப்பிடுகின்றது:

i. அரசியலமைப்பினை கௌரவித்துப் பற்றிப்பிடித்தல்,
ii. தேசிய நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை மேம்படுத்தல்,
iii. அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன நிறுவனங்களின் உரிய செயற்பாட்டினை வசதிப்படுத்தல்,
iv. தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கி சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான உரிய நிலைமைகள் உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்,
v. அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தினைப் பாராளுமன்றத்தில் வெளியிடல்,
vi. பாராளுமன்றத்தின் வைபவரீதியான அமர்வுகளுக்குத் தலைமைதாங்குதல்,
vii. பாராளுமன்றத்தினைக் கூட்டுதல், ஒத்திவைத்தல் மற்றும் கலைத்தல்,
viii. தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை ஏற்றுக்கொள்ளல், அங்கீகரித்தல் மற்றும் நியமித்தல்.
ix. ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல்,
x. குடியரசின் அரச முத்திரையினை வைத்திருத்தல்,
xi. யுத்தத்தினையும் சமாதானத்தினையும் பிரகடனப்படுத்தல்,
xii. அரசியலமைப்புடன் முரண்படாதவையான அவ்வாறான சகல விடயங்களையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றல்.

எமது அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையில் கூட ஜனாதிபதி செயலணியினை உருவாக்குவதற்கான அவ்வாறான **தனித்துவமான அதிகாரம்** குறிப்பிடப்படவில்லை. மாறாக உதாரணத்திற்கு, 1978 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க விசாரணைச் சட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைக்கான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினை உருவாக்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு. எவ்வாறாயினும், ‘ஜனாதிபதி செயலணிக்காக’ அவ்வாறான விசேட சட்டம் இல்லை.

அரசியலமைப்புடன் ஒத்திசையும் அவ்வாறான சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றல் பற்றிய அரசியலமைப்பின் உறுப்புரையான 33.2(h) இன் பரந்த மொழியில் ஜனாதிபதி தங்கியுள்ளார் என்று மாத்திரமே ஒருவரினால் ஊகிக்க முடியும்.

<u>வர்த்தமானியில் 'ஜனாதிபதி செயலணிக்கு' வழங்கப்பட்டுள்ள காரணங்கள்</u>

i. எதிர்காலச் சந்ததிக்காக இலங்கையின் வரலாற்றுப் பாரம்பரியத்தினைப் பாதுகாத்தல்.
ii. இலங்கை பெருமிதமான வரலாற்றினைக் கொண்டுள்ளமையும் தொல்பொருள் வரலாற்றினைக் கொண்டுள்ளமையும் தனித்துவத்திற்கான மூலமாகும்.
iii. இயற்கையின் நடவடிக்கையினாலும் மனிதர்களின் நடவடிக்கையினாலும் பராம்பரியம் என்பது சீரழிந்துவருகின்றது.
iv. இவ்வாறான பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பல்வேறு சமவாயங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

<u>செயலணியின் அதிகாரங்கள்</u>

செயலணியின் அதிகாரங்களை வர்த்தமானி பின்வருமாறு விபரிக்கின்றது;

i. கிழக்கு மாகாணத்தில் **தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த தலங்களை அடையாளம் காணல்.**
ii. பாதுகாத்தல் மற்றும் மறுபுனைவாக்கம் மூலம் தொல்பொருள் பாரம்பரியத்தினைப் பேணுவதற்குப் **பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.**
iii. அவ்வாறான தொல்பொருள் தலங்களுக்கு ஒதுக்கப்படவேண்டிய **காணியின் விஸ்தீரணத்தினை அடையாளம் காணல்** மற்றும் அவற்றினை உரிய முறையிலும் சட்டபூர்வமாகவும் **ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.**
iv. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த தலங்களின் கலாசாரப் பெறுமதியினைப் பாதுகாத்து இலங்கையின் **தனித்துவத்தினை உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் மேம்படுத்தல்,** அவ்வாறான பாரம்பரியத்தினை மேம்படுத்துவதற்காகப் **பரிந்துரைகளை வழங்கல்.**

பின்வருவனவற்றினையும் வர்த்தமானி மேலதிகமாகக் குறிப்பிடுகின்றது:

v. செயலணியினால் விசாரணைகளை நடத்திப் பணிப்புரைகளை வழங்க முடியும்
vi. காலத்திற்குக் காலம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க முடியும்.
vii. சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்க முடியும் அல்லது வேண்டுகோள்களை விடுக்க முடியும்.

செயலணியின் அறிவுறுத்தல்களுக்கு அல்லது வேண்டுகோள்களுக்கு **இயைபுறுவதை உறுதிப்படுத்த,** வர்த்தமானி பின்வருவனவற்றினையும் குறிப்பிடுகின்றது:

a) அவ்வாறான அறிவுறுத்தல்களுக்குச் சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் ஏனைய நபர்களும் கட்டாயம் இயைபுறவேண்டும்.
b) அரசாங்க உத்தியோகத்தர்களும் ஏனையோரும் சாத்தியமான சகல உதவிகளையும் சகல தகவல்களையும் வழங்கவேண்டும்.
c) அரசாங்க உத்தியோகத்தர் தரப்பில் அல்லது எந்த ஓர் அமைச்சினதும் அரசாங்கத் திணைக்களங்களினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் அல்லது அதேபோன்ற

நிறுவனத்தினதும் உத்தியோகத்தர் தரப்பில் ஏதாவது தாமதங்கள் அல்லது கடமை தவறல்கள் இடம்பெறின் அவை ஜனாதிபதிக்குத் தாமே முறைப்பாடு செய்யப்படவேண்டும்.

**<u>செயலணியின் உறுப்பாண்மை</u>**

1. செயலணியின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலான பாதுகாப்பு அமைச்சின் செயலாளராவார். பல சிவிலியன் பிணக்குகளுடன் சம்பந்தப்படும் பொறுப்பினைக் கொண்ட செயலணிக்கு அடிப்படையில் இராணுவப் பயிற்சி பெற்ற ஒருவர் தலைமை தாங்குகின்றார்.
2. சமயக் குழுமங்களின் பிரதிநிதித்துவம் என்று நோக்குகையில் இரண்டு பௌத்த பிக்குகள் உள்ளனர். ஏனைய அனைத்து உறுப்பினர்களும் சிங்கள பௌத்த இனத்துவச் சமயப் பின்புலத்தினைச் சேர்ந்தவர்கள். வேறு எந்தச் சமயமும் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லை.
3. ஏனைய உறுப்பினர்களுள் காணி ஆணையாளரும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகமும் கிழக்கு மாகாணக் காணி ஆணையாளரும் நிலஅளவையாளர் தலைமை அதிபதியும் சிரேஷ்ட பொலிஸ் டிஐஜியும் உள்ளடங்குகின்றனர்.
4. அரசியல் நலன்களைக் கொண்டவராகக் கருதப்படும் தெரன ஊடக வலையமைப்பின் தலைவரும் உறுப்பினராக உள்ளார்.

**<u>கருத்துரைகள்</u>**

1. தொல்பொருள் திணைக்களம் கொண்டுள்ள அதே செயற்பாடுகளில் சிலவற்றினைச் செயலணியும் கொண்டுள்ளது. இரட்டை நிர்வாக அணுகுமுறையினைக் கைக்கொள்வது விடயப் பரப்பின் மீது முழுப்பொறுப்பினையும் கொண்டுள்ள நிறுவனங்களினுள்ளேயான பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறுகின்றது. இது பொது நிதியினை வீணடித்து, செய்த வேலையினையே மீண்டும் செய்வித்து, இலங்கையின் தொல்பொருள் அபிவிருத்தியினுள் அரசியல் பக்கச்சார்பினை ஏற்படுத்துகின்றது. தொல்பொருள் போன்ற விடயங்களை இராணுவமயமாக்குவதன் அபாயம் என்னவென்றால் இது தொழில்வாண்மையினைச் சீர்குலைத்து ஏற்கனவே இப்பரப்பில் இயங்கிவரும் அரச நிறுவனங்களின் தகைமையினைக் கீழறுக்கின்றது.

2. முறையற்ற ஓர் அமைப்பாகவும் பாராளுமன்ற மேற்பார்வையின்றியும் இருக்கும் இச்செயலணி அதன் தீர்மானங்களினால் பாதிக்கப்படுகின்ற இலங்கையர்களின் மனதில் சந்தேகத்தினை உருவாக்கும். இதன் செயற்பாடுகள் கலந்தாலோசிப்பு அற்றவையாகவும் தன்னிச்சையானவையாகவும் இருப்பதற்கான சாத்தியமே காணப்படுகின்றது. செயலணியின் நடவடிக்கைகள் பலத்தினைப் பிரயோகிப்பவையாக அல்லது வன்முறை மிக்கவையாக இருந்தால், அவை தனிநபர்களுக்கும் சமுதாயங்களுக்கும் துயரங்களை ஏற்படுத்தி அவர்கள் அநீதியாகத் தண்டிக்கப்படுவதற்கும் வழியேற்படுத்தும்

3. செயலணியில் பெண்களின் பிரதிநிதித்துவமோ அல்லது இனத்துவ மற்றும் சமயச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவமோ இல்லை. **செயலணியின் உறுப்பாண்மை அதற்கு முறைமை நிலையினை வழங்கவில்லை என்பதுடன் நம்பிக்கையினை உருவாக்கவில்லை,** மேலும் கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவத்தினால் ஏற்கனவே கடுமையான துயரங்களுக்கு முகங்கொடுத்து அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு ஆளாகிவரும் மக்கள் சமுதாயத்தினருக்கிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தச் செயலணி பங்களிப்பு வழங்கவில்லை (மாறாக எதிர்மாற்றமானதையே செய்கின்றது).

4. கிழக்கு மாகாணத்திலே இனத்துவ அடிப்படையிலும் சமய அடிப்படையிலும் மிகுந்த சர்ச்சைக்குள்ளாகியுள்ள காணிப் பிரச்சினைகள் நிலவிவருகின்றன. இங்கே பல வருடங்களாகச் சகவாழ்வு வாழ்ந்து வருகின்ற சமுதாயங்களும் இருக்கின்றன. கிழக்கு மாகாணம் என்பது சனத்தொகைப் பரம்பல், அரசியல், இனத்துவ மற்றும் சமய அடிப்படையில் உயர் பாகுபாடுமிகு வள ஒதுக்கீடுகள், மோசமான சமூகப் பொருளாதாரத் தாக்கங்களைத் தீர்ப்பதில் நீடித்த தாமதம் உள்ளிட்ட பிரச்சினைகளினால் அல்லாடும் ஒரு பூமி. மானுடப் பிரச்சினைகளின் சிக்கற்தன்மைகளையும் சிடுக்குகளையும் கிழக்கின் காணிகள் தொடர்பான வரலாற்று ரீதியான துயரங்களையும் புறந்தள்ளிவிட்டு, இலக்குப் பிரதேசங்களில் வாழும் சகல மக்களும் அனுபவித்துக்கொண்டிருக்கும் யதார்த்தங்களையும் அவர்களின் நலன்களையும் வேண்டுமென்றே கைவிட்டுவிட்டு தொல்பொருள் பாதுகாப்பினை முன்னுரிமைப்படுத்துவது பனையேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக மாறி அவர்களின் அபிவிருத்திக்கும் முட்டுக்கட்டையினை ஏற்படுத்தும் என்பதே உண்மையாகும்.

5. செயலணியின் உறுப்பாண்மையினை நோக்குகையில் சிறுபான்மையினரின் நலன்களைக் காவுகொடுத்து சிங்கள பௌத்த நலன்களை முன்னுரிமைப்படுத்துகின்றமையினையே அது சுட்டிநிற்கின்றது. வர்த்தமானியில் சகவாழ்வு பற்றியும் ஏனையோருக்கான மரியாதை பற்றியும் ஒரு வார்த்தை கூடச் சொல்லப்படவில்லை. இந்தச் செயலணியின் உறுப்பாண்மையின் காரணமாகச் சிறுபான்மைச் சமுதாயங்கள் உள்ளார்ந்த ரீதியில் பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் உண்டு என்பதுடன் சிங்களப் பெரும்பான்மையினர் மீதான பகையுணர்வு தூசிதட்டப்பட்டுப் புதிய மோதல்கள் கருக்கொள்வதற்கும் இது கால்கோளாக அமையலாம். வதிவிடச் சமுதாயங்களுக்கிடையில் அவநம்பிக்கை ஆழமடைந்து துருவமயமாதல் இடம்பெறவும் இது வழிகோலலாம்.

6. செயலணியில் இராணுவத்தினையும் சட்ட அமலாக்கல் அதிகாரிகளையும் உள்ளடக்கியுள்ளமை, செயலணியின் தற்றுணிபு தேவையெனக் கருதுகையில் ஆயுத வன்முறையினைப் பயன்படுத்தச் சட்டரீதியாக ஆணை வழங்கப்பட்டுள்ள இரண்டு நிறுவனங்கள் இச்செயலணியின் காலடியில் சேவைசெய்யக் காத்திருக்கின்றன எனும் செய்தியினை வழங்குகின்றது.

## முடிவு

முடிவாக, செயலணியினை உருவாக்கியமை நிறைவேற்று அதிகாரத்தினைச் சட்ட உரிமையின்றிப் பயன்படுத்தியமையாகும் என்பதுடன் இது ஜனநாயக நிறுவனங்களைப் புறக்கணிக்கின்ற செயலுமாகும். அரச நிறுவனங்கள் எதிர்நோக்கும் குறைபாடுகள் அல்லது சவால்கள் பொது நிறுவனங்களுக்கு இயலுமான நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் தீர்க்கப்படவேண்டுமேயன்றி அவற்றினை தேவைக்கு மேற்பட்டதாக ஆக்குவதால் தீர்க்கப்படலாகாது. மக்களை வெளியேற்றி சகல சமுதாயங்களையும் பாதிக்கும் காணியற்ற நிலையினை உருவாக்குவதற்கு தொல்பொருள் அடிப்படையிலான நியாயப்படுத்தல்களைத் தவறாகப் பயன்படுத்துவது இலங்கையில் ஒரு பரிச்சயமான போக்காகக் காணப்படுகின்றது. இவ்வாறான பல சந்தர்ப்பங்களை PARL ஆவணப்படுத்தியுள்ளது. விசேடமாக இந்தத் தேர்தல் பிரச்சாரக் காலத்தில் அமைதியின்மையினை உருவாக்கிச் சிறுபான்மைச் சமுதாயங்களை அச்சுறுத்தி அற்ப அரசியல் லாபம் தேடுவது சகல இலங்கையர்களினாலும் எதிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். காணி ஆளுகை மற்றும் நிர்வாகம் நியாயமானதாகவும் நீதியானதாகவும் இருக்கவேண்டும்.

**பரிந்துரைகள்**

நாடு முழுவதும் நடத்தப்பட்ட பரந்த கலந்தாலோசிப்பினைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட மக்களின் காணிப் பொலிஸ் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை PARL நினைவுபடுத்துகின்றது:

**பரிந்துரை 7.1** சிறுபான்மைச் சமுதாயங்கள் வரலாற்று ரீதியாகப் பயன்படுத்திவரும் காணிகளில் இருந்து அவர்கள் பிரிக்கப்படலாகாது. சிறுபான்மையினரை இடம்பெயர்ப்பதற்காக காட்டுயிர்களைப் பாதுகாத்தல் என்றும் வனப்போர்வையினைப் பாதுகாத்தல் என்றும் போலியான தொல்லியல் சான்றுகளைக் காட்டுவது நிறுத்தப்படவேண்டும்.

**பரிந்துரை 7.2** இனத்துவ மற்றும் சமயப் பன்மைவாதத்தினை நிலைகுலையச் செய்கின்ற காணி மீதான தனியுரிமைக் கோரிக்கைகளை வலுப்படுத்துவதற்காகத் தொல்லியலும் வரலாறும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை நிறுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற சிறுபான்மைச் சமுதாயங்களின் சமூக, கலாசார மற்றும் அரசியல் சகவாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தொல்பொருள் மற்றும் வரலாறு சூழ்ச்சித்திறனுடன் கையாளப்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

*இக்குறிப்பு காணிக்கான உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பினால் (PARL) தயாரிக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி பற்றிய கருத்துரைகள் 2020 ஜூன் 22 இன் போது கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.*